## ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுவைத்தியசாலை சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுவைத்தியசாலை சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட் நியமம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் போதியளவான முன்னைய காலப்பகுதியின் தவறுகள் அவை கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் விநியோகிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்று தொகுதியில் தவறு ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை மீண்டும் வெளியிடுதல் பிற்போட்ட ரீதியில் சரிசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறன்றி முன்னைய ஆண்டின் சீராக்கமாக ரூபா 10.26 மில்லியன் தொகை 2020 சனவரி 01 ஆந் திகதி முன்கொண்டுவரப்பட்ட திரண்ட பற்றாக்குறை மற்றும் ரூபா 2.8 மில்லியன் ஏனைய ஒதுக்க மீதியில் சீராக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த விடயங்களுடன் இணங்குவதுடன் இவ்வாறான நிலைமை 2021 ஆம் ஆண்டின் போது ஏற்படாமல் இருப்பதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கிரயம் ரூபா 2,901.52 மில்லியன் ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றமையால் இந்த சகல நிலையான சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அது இந்த ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தற்போது பயன்படுத்தப் படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக நியமங்களில் குறிப்பிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 10 இன் 39(அ) பந்தியின் பிரகாரம் சேவை வழங்குவதற்குரிய கொடுக்கல் வாங்கல்களின் வருமான செலவினங்களை இனங்காண்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 2,353.15 மில்லியன் தொகையான வைத்தியசாலைக் கட்டணம் (Hospital Charges) கணிப்பிடுவதற்காக பின்பற்றப்பட்ட கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வைத்தியசாலைக் கட்டணங்களை கணிப்படுவதற்காக குறித்துரைத்த கொள்கையொன்று பின்பற்றப்பட வேண்டியிருந்ததுடன் அந்த கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது 15 உயரமான கட்டில்களுக்குரிய கடன்பட்டோர் மற்றும் விடுவித்தல் வைத்தியசாலை செலவினங்களின் பெறுமதி மீண்டும் மீண்டும் வைத்தியசாலைக் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு | கணனி முறைமையை பரீட்சித்து இதில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி மற்றும் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள | இந்த தவறுகள் சரி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டமையின் காரணமாக வைத்தியசாலை கட்டண வருமானம் ரூபா 13.81 மில்லியன் தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை தெரிவு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | கணக்கீட்டு வழுக்கள் என்பன 2021 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைத்தியசாலை கட்டண கட்டுப்பாட்டுக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 4.23 மில்லியன் வரவு மீதி இனங்காணப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமல் அதற்கு பதிலாக அந்த மீதி வைத்தியசாலை விடுதி கட்டண வருமானத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக வைத்தியசாலை விடுதி கட்டண வருமானம் அதற்கு சமமான பெறுமதியால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வைத்தியசாலை கட்டுப்பாட்டுக் கணக்கு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பகுப்பாய்வு செய்து வேறுபாடுகள் காணப்படுமாயின் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | தொழில்சார் கட்டணம் அறவிடல் மற்றும் மீள செலுத்ததல் சரியான பிரகாரம் கணக்கீடு செய்யும் திட்ட முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில்சார் கட்டண கணக்கில் காணப்பட்ட ரூபா 62.64 மில்லியன் வரவு மீதிக்கான காரணம் இனங்காணப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு பதிலாக அந்த மீதி வைத்தியசாலை கட்டண கட்டுப்பாட்டு கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் இலாபம் அப்பெறுமதியால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 1998 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 3.62 மில்லியன் செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டணம் கணக்கில் காண்பிக்கப்படுகின்ற மீதியை தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானமாக இனங்காண்பதற்கோ மீளாய்வாண்டின் போதும் | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் இணங்குவதுடன் தொழில்சார் கட்டணத்தை சரியாக கணக்குகளில் கணக்கீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது | தொழில்சார் கட்டணம், தொழில்சார் அறவீடுகள் மற்றும் மீள செலுத்துதல்கள் தொடர்பான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் அறவிடல்கள் மற்றும் செலுத்துதல்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 20.45 மில்லியன் தொகையான கடன்பட்டோரில் அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தமை கண்டறியப்பட்டிருந்த போதும் அதற்கு பதிலாக இழப்பீட்டு பெறுமதிக்காக ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் கடன்பட்டோரிடமிருந்து ஐயக்கடன் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதனை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த தவறு சரிசெய்யப்படல் வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் நன்கொடையாக கிடைத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 1.33 மில்லியன் ஆன நிலையான சொத்துக்கள் கணக்குகளுக்கு சரியாக வரவு வைக்கப்பட்டிருந்த போதும், நன்கொடை மற்றும் மானியக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் மூலதன மானிய பெறுமதி மேற்கூறப்பட்ட அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நன்கொடையாக கிடைத்த சொத்துக்கள் கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைத்தல் 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைத்தியசாலை கட்டண கடன்பட்டோர் கணக்கில் காணப்பட்ட ரூபா 22.88 மில்லியன் தொகையான செலவு மீதிகள் மற்றும் வியாபார கடன்கொடுத்தோர் கணக்கில் காணப்பட்ட ரூபா 22.26 மில்லியன் தொகையான வரவு மீதிகள் என்பவற்றிற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு பதிலாக அந்த கணக்குகளின் முரண்பாட்டு மீதிகளுக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, தனியார் பிரிவின் வங்கியில் பொது வைத்தியசாலை சபை என்ற பெயரில் நடைமுறைக் கணக்கில் 2020 திசெம்பர் 31 | 2021 ஆம் ஆண்டின் போது கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கணக்குகளில் இணக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் சமர்ப்பிக்கும் போது இந்த நிலைமை சரிசெய்யப்படும். | கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற வேறுபாடுகளுக்குரிய காரணங்களை இனங்கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல் காணப்பட்ட ரூபா 5.13 மில்லியன் தொகையான மேலதிகப்பற்று மீதி, நடைமுறைப் பொறுப்பாக வெளிப்படுத்துவதற்கு பதிலாக நடைமுறைச் சொத்துக்களிலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | பொது வைத்தியசாலை சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற ரூபா 12.50 மில்லியன் தொகையான Dialysis Assistant நிதியத்திற்குரிய நிலையான வைப்பு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | Dialysis Assistant நிதியத்திற்குரிய நிலையான வைப்பு 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சரியாக காண்பிக்கப்படும். | நிதியத்திற்குரிய முதலீடுகள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | 2018 ஆம் ஆண்டின் போது நிதி அமைச்சிலிருந்து பொது வைத்தியசாலை சபைக்கு கிடைக்கப்பெற்ற BMW வகையின் மோட்டார் வாகனம் பொதுவைத்தியசாலை சபையின் தலைவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் அந்த மோட்டார் வாகனத்தின் மீள்மதிப்பீட்டு பெறுமதி கணக்குகளில் குறிப்பிடப்படும். | சபைக்குரிய சொத்துக்களை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | 2016/2017 ஆம் ஆண்டுகளின் போது உடைத்து அகற்றப்பட்ட 02 கட்டிடங்களின் கிரயம் ரூபா 3.63 மில்லியன் மற்றும் உரிய திரண்ட பெறுமானத்தேய்வு என்பன புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் கட்டிடத்தின் கிரயம் அப்பெறுமானத்தால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2016 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதும் விற்பனைப் பெறுமதி இனங்காண முடியாத மற்றும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது அகற்றப்பட்ட ரூபா 5.03 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்ட உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு இனங்காணப்பட்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை | இந்த தவறு 2021 ஆம் ஆண்டு கணக்குகளில் சரிசெய்யப்படும். | இந்த தவறுகள் சரிசெய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஒ) | கணக்கு வைத்தல் வழுக்களின் காரணமாக நடைமுறை வேலைக் கணக்கில் ரூபா 38.55 மில்லியன் தொகை மற்றும் ரூபா 8.29 மில்லியன் தொகைகள் முறையே அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைக் கணக்கின் மீதி ரூபா 30.26 மில்லியன் தேறிய பெறுமதியொன்று அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஓ) | சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியரினால் வைத்தியசாலைக்கு எதிராக தொழில் நியாய சபையில் தொடரப்பட்ட வழக்கிற்கு உரியதாக பொது வைத்தியசாலை சபையினால் அந்த நியாய சபையில் வைப்புச் செய்யப்பட்ட பணம் ரூபா 1.62 மில்லியன் ஆகும். தொழில் நியாய சபையினால் அந்த பணம் மீளாய்வாண்டின் போது உரிய ஊழியருக்கு செலுத்தப்பட்டிருந்த போதும் அந்தக் கொடுப்பனவுகள் மீளாய்வாண்டின் செலவினமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அதற்கு சமனான பெறுமதியால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | இந்தத் தவறு சரிசெய்யப்படல் வேண்டும். |
| (ஔ) | பொது வைத்தியசாலை சபையின் கணக்குகளின் பிரகாரம் பொது வைத்தியசாலை சபையினால் மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் ஏனைய சத்திரசிகிச்சை பொருட்களுக்காக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை ரூபா 472.52 மில்லியன் ஆக இருந்த போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவினால் | மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து பெறப்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கு மாத்திரம் விநியோகிக்கப்படுகின்ற மருந்துகள் பணம் அறவிடப்படாதல் வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் உரித்தாக இருந்தமையினால் அந்த மருந்துகளின் பெறுமதி குறிப்பிடப்படாமல் | மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற மருந்துகள் மற்றும் ஏனைய சத்திர சிகிச்சை பொருட்களுக்காக செலுத்த வேண்டிய பணம் பொது வைத்தியசாலை சபையின் கணக்குகளுடன் இணக்க |

| | | |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அத்திகதியில் அந்த மீதி ரூபா 631.89 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் ரூபா 159.37 மில்லியன் வேறுபாட்டிற்கான காரணம் இனங்காணப்பட்டு உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணனி முறையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதி சரியாக இருந்ததுடன் மருத்துவ வழங்கல் பிரிவின் அபாயகரமான ஔடதங்களை கொள்வனவு செய்யும் போது அதற்காக உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மாத்திரம் அந்த மருந்து வழங்கல் மேற்கொள்ளப்படுவதனால் மருத்துவ வழங்கல் பிரிவிலுள்ள பெறுமதியை எங்களின் நிதிக்கூற்றுக்களில் உள்ள பெறுமதிகளுடன் சீராக்குதல் பொருத்தமற்றது. | கூற்றொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | பட்டியல், பதிவேடுகள், கணனி அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன் கொடுத்தோர் | 581.93<br>581.93 | 589.81<br>578.49 | 7.88<br>3.44 | கோவைகள், பதிவேடுகள் மற்றும் பேரேட்டு மீதிகளுக் கிடையேயான வேறுபாடுகளுக்குரிய கணக்குகளின் இணக்கம் 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அந்த கணக்குகளின் தனிப்பட்ட மீதிகள் மற்றும் பிரதான பேரேடுகளுக்குரிய வேறுபாடுகள் சரிசெய்யப்படும். | Accpac கணக்கீட்டு கொள்கை முறைமையில் காணப்படுகின்ற வழுக்கள் இனங் காணப்பட்டு சரிசெய்வதற்கும், தனிப்பட்ட கடன் கொடுத்தோர் மீதிகளின் பட்டியல் மற்றும் கடன்கொடுத்தோர் அறிக்கைகளின் பிரகாரமான மீதிகள் ஒன்றுக் கொண்று ஈடாகின்ற வகையிலும் மற்றும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | கடன்கொடுத்தோர் மீதிகளை இணக்கம் செய்தும் பேணிச் செல்லல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைத்தியசாலை கட்டண கடன்பட்டோர் | 303.67<br>303.67 | 357.24<br>356.68 | 53.57<br>53.01 | - மேற்படி - | Accpac கணக்கீட்டு கொள்கை முறைமையில் காணப்படுகின்ற வழுக்கள் இனங் காணப்பட்டு சரி செய்வதற்கும், தனிப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் பட்டியல் மற்றும் பணிக்கொடை கொடுக்கல் வாங்கல் அறிக்கைகளின் பிரகாரமான மீதிகள் ஒன்றுக் கொன்று ஈடாகின்ற வகையிலும் மற்றும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற கடன்கொடுத்தோர் மீதிகளை இணக்கம் செய்தும் பேணிச் செல்லல் வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைத்தியசாலை கட்டண வைப்பு | 10.60 | 8.66 | 1.95 | - மேற்படி - | வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு உரிய பிரகாரம் சீராக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | | | |
| (அ) | நானாவித வைப்புக்கள் | 6.16 | 36 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய நானாவித வைப்புக்களின் | இதில் அனேகமான வைப்புக்கள் 1984-1985 காலப்பகுதிகளுக்கு | பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களில் விசாரணை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சரியான தன்மையை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் | உரியதாக இருந்தமையினாலும் அந்த சந்தர்ப்பத்தில் அந்த வைப்புக்களுக்காக விநியோகிக்கப் பட்டுள்ள பற்றுச் சீட்டுக்கள் உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்க ளுடன் இணைக்கப் பட்டமையாலும் இந்த பழைய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தற்போது அழிவடைந்திருந்தது | செய்து வைப்பு மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | சேவைக் கட்டணம் | 0.55 | தொழில்சார் கட்டணங்களில் 0.15 சதவீதம் மாத்திரம் வைத்தியசாலை சேவைக் கட்டணமாக அறவிடுவதற்குரிய பணிப்பாளர் சபை அங்கீகாரம் | 2021 ஆம் ஆண்டின் போது கணக்காய்விற்கு உரிய சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2019 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைத்தியசாலை கடன்பட்டோர் அல்லது சந்தைக் கடன் கொடுத்தோர் | 303.67<br>581.93 | நிலுவைக் கால எல்லையை சரியாக வெளிப்படுத்துகின்ற பிரகாரம் தயாரிக்கப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு | - மேற்படி - | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு நிதிக்கூற்றுக்க ளுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள் | 0.80 | மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள் தொடர்பான பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு | - மேற்படி - | பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 வருடங்கள் முதல் 23 வருட காலம் வரை கொண்டு வரப்படுகின்ற ரூபா 5.73 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய 16 மீதிகளை தீர்த்து வைப்பதற்கோ அல்லது | நீர் வழங்கல் வடிகாலமைப்பு செலுத்த வேண்டிய பணம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய | செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானமாக |

| | | |
|---|---|---|
| பொறுப்பொன்று இல்லாத மீதியை வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதியாக இருந்தமையினாலும், அந்த பணம் கோரப்படாதிருந்த மையினாலும் கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டணங்கள் 20 வருடங்களுக்கு மேற்பட்ட பழையதாக இருந்த போதிலும் தொழில்சார் கட்டணத்தை செலுத்தும் போது ஏற்பட்ட மோசடிகள் தொடர்பாக விசாரணையொன்றை செய்வதற்கும் இந்த ஆவணங்கள் பரீட்சிக்கும் குழுவினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. ஏனைய நானாவித கடன்கொடுத்தோர் மீதி மற்றும் செயலாற்றல் பிணைமுறி வைப்புக்கள் தொடர்பாக கண்டறிந்து கணக்குகளிலிருந்து நீக்குவதற்கும் சீராக்கங்களை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மிகுதி தொகை 25 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாக இருந்தமையால் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. | இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயம் | | | |
| (i) | 2.1 மற்றும் 2.2 முதல் 2.6 வரையான பந்தி | பதவியணியின் ஒவ்வொரு ஊழியரினதும் மற்றும் ஒவ்வொரு தரங்களினதும் பதவிகளுக்காக தேவையான | தற்போது தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை வரிசை அமைச்சு ஊடாக | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தகைமைகள், பதவியின் சம்பள அளவு திட்டம், வயது எல்லை மற்றும் உரிய ஏனைய விபரங்களை உள்ளடக்கி ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து தாபன விதிக் கோவையில் காண்பிக்கப்பட்டுள்ள செயல் ஒழுங்கு முறைகளை பின்பற்றி அந்த நடைமுறைக்காக உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | விதிக்கோவையில் காண்பிக்கப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 5.2.6 உப பந்தி | ஆட்சேர்த்தல் தெரிவுச் சபை அதன் தலைவரையும் உள்ளடக்கிய 05 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய, அந்த சபையின் கீழ் உள்ள ஒரு அங்கத்தவரின் வெற்றிடம் காணப்படுகின்ற அமைச்சு அல்லது நிறுவனத்திற்கு வெளியில் உள்ள அமைச்சு அல்லது திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் பொது வைத்தியசாலை சபையின் பிரதி பணிப்பாளர் பதவிக்காக நியமிக்கும் போது அந்த தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதி பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்த்தல் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையில் காண்பிக்கப் பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய அரசாங்கத்தின் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை உறுப்புரை கோவை | பதிற்கடமை பிரதி பணிப்பாளராக செயற்படுகின்ற மருத்துவ உத்தியோகத்தர் II ஆம் தர உத்தியோகத்தர் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு உயர்த்தும் போது மருத்துவ சேவை பிரமாண கோவையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படாதிருக்கும் போது பிரதி பணிப்பாளர் பதவிக்காக 2017 பெப்ரவரி | பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்த்தல் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை சுகாதார சேவைகள் மருத்துவ சேவை பிரமாண கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்ட பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தி மிகுதி நடவடிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 01 ஆந் திகத முதல் நியமிக்கப்பட்டிருந்தார். | | எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிலையான சொத்துப் பதிவேடு தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த பதிவேடு 2021 ஆம் ஆண்டின் கணக்குகளுடன் கணக்காய்விற்காக சமர்ப்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்படும். | திறைசேரி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த ஆண்டறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 இன் நிதியாண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்குகள் 08 மாதங்களுக்கு மேற்பட்ட காலதாமதத்துடன் 2021 நவம்பர் 16 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 6.3.6 ஆம் வழிகாட்டி | கேள்வி திருத்தல் தொடர்பான நடவடிக்கைகள் குறித்துரைத்த மாதிரி படிவத்தில் அறிக்கையிடப்பட வேண்டியிருந்ததுடன் அந்த அறிக்கை குறிப்புக்கள் கேள்வி திறக்கும் குழுவின் சகல அங்கத்தவர்களினாலும் கையொப்பம் இட வேண்டியிருந்த போதிலும் மருந்துகளை கொள்வனவு செய்யும் போது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | கேள்வி திறக்கும் போது மாதிரி பத்திரம் 03 இல் 02 இன் அறிக்கையிடல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட போதும், கேள்விதாரர் சமர்ப்பித்த கூறுவிலைகளுடன் அறிக்கையொன்று அந்த சந்தர்ப்பத்தில் தயாரித்தல் பிரயோக ரீதியில் வசதியீனமாக இருந்தது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 8.9.1(ஆ) வழிகாட்டி | ரூபா 500,000 தொகையை விஞ்சுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒப்பந்தத்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று எழுதி கையொப்பம் இடப்பட வேண்டிய போதிலும் | இந்த கைவிடல்களுக்கு நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் ஏற்பட்டிருந்ததுடன் இவ்வாறான செயற்பாடுகளை | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 24.19 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட சத்திரசிகிச்சை உபகரணங்கள் தொடர்பாக அவ்வாறான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று எழுதி கைையொப்பமிடப்பட்டிருக்க வில்லை. | குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஊ) | 2007 இன் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை<br>---------------------------------- | | | |
| (i) | 2.1 ஆம் வழிகாட்டி | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழ் (NMRA Certificate) கிடைத்துள்ள மருத்துவ துணைப் பாகங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த சான்றிதழ் பெறப்படாதிருந்த சத்திரசிகிச்சை உபகரணங்களில் 04 வகைகள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் NMRA சான்றிதழ் பெற்றுக் கொள்வதன் கீழ் கொள்வனவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சான்றிதழ் பெறப்படாத மற்றும் இருதய சத்திரசிகிச்சைகள் அவசர நிலைமையினை கவனத்தில் கொண்டு இந்த விடயங்களை கொள்வனவு செய்வதற்கு வைத்தியசாலையின் தலைவர் அங்கீகாரம் வழங்கியிருந்தார். | மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 5.2.2 ஆம் வழிகாட்டி | அவசர கொள்வனவுகள் தவிர தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சுகாதார அமைச்சின் பிரதிநிதி, அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதி, உரிய விசேட நிபுணத்துவத்துவத்துடன் ஆகக்குறைந்த இரண்டு ஆலோசனையாளர்கள் மற்றும் திறைசேரியில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிநிதியொருவரை உள்ளடக்கியிருக்க வேண்டிய போதிலும், மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களை கொள்வனவு செய்யும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, வைத்தியசாலை பிரதி பணிப்பாளர், உரிய விசேட நிபுணத்துவம் உடைய ஒரு | இந்த கட்டமைப்பின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தர்வர்களை நியமித்தல் மற்றும் அமுல்படுத்துதல் பிரயோக ரீதியில் மிகவும் வசதியற்ற செயற்பாடாகும். | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆலோசனையாளர் மற்றும் உதவி கணக்காய்வாளரினை மாத்திரம் உள்ளடக்கியிருந்தது. | | |
| (எ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 02/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | (i) தொலைத்தொடர்பு வசதிகள் வழங்கும் ஆகக்கூடிய மாதாந்த எல்லையின் கீழ் உரித்து பெறுகின்ற உத்தியோகத்தர்களின் சகல அலுவலக மற்றும் வீட்டு தொலைபேசிகள் மற்றும் பெக்ஸ், பிரத்தியேக கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையதள வசதிகளை உள்ளடக்கிய பட்டியல் பெறுமதி மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் ஆகக்கூடிய மாதாந்த எல்லையின் பெறுமதி படியாக சம்பளத்துடன் சேர்த்து செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக 14 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட தொலைபேசி வசதிகள் வழங்கும் படிகளின் கூட்டுமொத்தம் ரூபா 707,000 ஆகும். | 2022 சனவரி முதல் 2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | (ii) சுற்றறிக்கையின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்படாத சபையின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் மாதாந்தம் ரூபா 2,000 வீதம் ரூபா 72,000 தொகை தொலைத்தொடர்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | 2016 ஒக்தோபர் 10 ஆந் திகதிய டீஎம்எஸ்/1758-Vol.1 ஆம் இலக்க முகாமைத்துவ | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மீள்கட்டமைப்பு முன் மொழிவு தயாரிக்கப்பட்டு தேசிய சம்பளங்கள் மற்றும் | தற்போது பதவியணியினர் மீள்கட்டமைப்பிற்காக தேவையான முன்மொழிவு தயாரித்தல் இறுதிக் கட்டத்தில் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மீள் கட்டமைப்பிற்குரிய முன் மொழிவுகள் |

| | | | |
|---|---|---|---|
| சேவைகள் திணைக்கள கடிதம் | ஆளணி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுவதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 173.8 மில்லியன் இலாபமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 108.27 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 282.07 மில்லியன் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் செலவினங்கள் அதிகரித்தமை ரூபா 60.07 மில்லியனாக இருந்த போதிலும் வருமானம் ரூபா 342.14 மில்லியனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொதுவைத்தியசாலை சபையில் அமைந்துள்ள அந்த சபைக்கு சொந்தமான காணிக்குரிய உரித்துறுதியின் பிரகாரம் நில அளவையாளர் நாயகத்தினால் (Surveyor General) 1981 இன் போதும், 1983 இன் போதும் உறுதிப்படுத்தப்பட்ட 03 வரைபடத்தின் கீழ் காணப்படுகின்ற காணி பகுதியின் 10.0229 ஹெக்டயர் மொத்த நில அளவு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதில் ஒரு நில வரைபடத்தில் உள்ளடக்கப்பட்ட 9.9469 ஹெக்டயர் அளவு நில அளவையாளர் நாயகத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது மீண்டும் அளவிடப்பட்டிருந்தது. அத்திகதி வரையில் சபையின் பயன்பாட்டிற்காக காணப்பட்ட நில அளவு 9.8047 ஹெக்டயர் மாத்திரமாக இருந்ததுடன் 09 நிலையங்களுக்குரிய 0.1422 | இது தொடர்பாக பெறப்பட்ட சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் வரைபடம் தயாரிக்கும் போது ஒரு பகுதி கைவிடப்பட்டிருக்குமாயின் அது என்ன என்பது தொடர்பாக கொழும்பு மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் அதிகாரியிடம் விசாரணை செய்து தேவையாயின் அந்த தவறை திருத்துவதற்காக மீண்டும் அளவை நடவடிக்கைகளை செய்வதற்கும் அனுமதியற்ற வகையில் பிடித்து வைத்திருக்கும் பகுதியாக இனங்காணப்பட்டுள்ள 0.1422 ஹெக்டயர் இற்காக 1979 இன் 7 ஆம் இலக்க | சட்டமா அதிபர் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொதுவைத்தியசாலை சபை அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணியை விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஹெக்டயர் காணி அளவில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் பயன்படுத்தப்படுகின்றமை நில அளவையாளர் நாயகத்தினால் இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் பொருத்தமான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2015 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரசாங்கத்தின் காணி (உரித்தை மீளப் பெற்றுக் கொள்ளல்) சட்டத்தின் கீழ் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சுகாதார துறையில் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை தாபிக்கும் நோக்கில் முன்னாள் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் பொதுவைத்தியசாலை சபை, இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சுடன் 2013 மே 09 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் சுகாதார மருத்துவ கற்கை பல்கலைக்கழக கல்லூரியொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2016 மே அளவில் உடன்படிக்கை முடிவடைந்திருந்த போதிலும் அதுவரை பாடநெறியை பூர்த்திசெய்யாத மாணவர்களுக்காக கல்லூரியினை நடாத்திச் செல்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்ததுடன் சுகாதார அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் கல்லூரிக்கு ரூபா 3.8 மில்லியன் வரை நிதி வசதிகளை வழங்குவதற்கும், அந்த தொகை முன்னாள் போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மூலம் மீளளிப்புச் செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் வைத்தியசாலையினால் செலவிடப்பட்ட ரூபா 8.94 | வைத்தியசாலை நிர்வாக சபையினால் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக அமைச்சிற்கு கடித கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொண்டு உச்ச அளவில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கல்லூரிக்காக செலவிடப்பட்ட செலவினங்களை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீளளிப்புச் செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (இ) | விசேட நிபுணத்துவ வைத்தியர்கள் தமது அலுவலக நேரங்களின் பின்னர் மேற்கொள்கின்ற சத்திரசிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்காக பொதுவைத்தியசாலை சபையினால் மாதாந்தம் ரூபா 581,418 தொகை அளவில் பொது மேந்தலை கிரயமாக செலவிடப்படுகின்றமை இனங்காணப்பட்டிருந்தது. எனினும் அந்த சத்திரசிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்காக அறவிடப்படுகின்ற தொழில்சார் கட்டணங்களில் 0.15 சதவீதம் சேவைக் கட்டணமொன்று மாத்திரம் அறவிடும் திட்ட முறையின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட மொத்த தொழில்சார் கட்டணம் ரூபா 363.17 மில்லியனில் அறவிடப்பட்ட மொத்த சேவைக் கட்டணம் ரூபா 546,035 மாத்திரம் ஆகும். சேவைக் கட்டணத்தை அதிகரித்தல் தொடர்பாக 2019 செப்தெம்பர் 25 ஆந் திகதி பணிப்பாளர் சபைக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக செலவிடப்பட்ட கிரயத்துடன் ஒப்பிடும் போது அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணத்தை அதிகரித்துக் கொள்வதற்கு இதுவரையிலும் தவறியிருந்தது. | சராசரியாக வாட்டுக்களில் நோயாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற இலாப சதவீதம் 10 சதவீதமாக இருந்த போதிலும் பணம் செலுத்தும் வாட்டுக்களில் நோயாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற இலாப சதவீதம் 30 வீதம் ஆனமையால் வைத்தியசாலைக் கட்டணம், மருந்துகள் மற்றும் நுகர்வுப் பொருட்கள், சத்திர சிகிச்சைக் கட்டணம், பரிசோதனைக் கட்டணங்களுக்காக வைத்தியசாலை கூடிய வருமானமொன்றை பெறுகின்றமையால் தொழில்சார் கட்டணங்களில் 0.15 சதவீத கட்டணமொன்று அதற்கு மேலதிகமாக அறவிடப்படுவதுடன் இந்தக் கட்டணம் தொழில்சார் கட்டணம் தொடர்பான நிர்வாகக் கட்டணம் மாத்திரம் ஆகும். | தொழில்சார் கட்டணங்களில் வைத்தியசாலை சேவைக் கட்டணமாக அறவிடப்படுகின்ற சதவீதத்தை மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டியதுடன் அதற்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பொது வைத்தியசாலை சபையின் பிரதிப் பணிப்பாளராக செயற்பட்ட வைத்திய உத்தியோகத்தருக்கு 2018 மே 30 ஆந் திகதி முதல் 2019 யூலை 11 ஆந் திகதி வரையான காலத்தின் போது சம்பளமற்ற வெளிநாட்டு பயிற்சியொன்றுக்காக ஐக்கிய இராச்சியத்தின் Oxford பல்கலைக்கழகத்திற்கு | இந்த உத்தியோகத்தர் புலமைப்பரிசிலை பூர்த்தி செய்து நாட்டிற்கு வருகை தந்ததன் பின்னர் 2021 யூன் 17 ஆந் திகதி சேவையிலிருந்து விலகும் வரையான காலப்பகுதியில் இந்த வைத்தியசாலையில் சேவையாற்றியிருந்த துடன் அவ்வாறே அவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர | வெளிநாட்டு புலமைப் பரிசில் விண்ணப்பம் சுகாதார அமைச்சினால் நிராகரிக்கப் பட்டிருக்கும் போது அந்த உத்தியோகத் தருக்கு புலமைப் பரிசிலுக்காக வெளிநாடு செல்வதற்கு 02 வருடங்கள் வரை |

| | | |
|---|---|---|
| புலமைப்பரிசில் கிடைத்திருந்தது. வைத்திய உத்தியோகத்தரின் பட்டப்பின் கல்வி நடவடிக்கைகளுக்காக செலுத்தப்படுகின்ற படிகள் பொதுவைத்தியசாலை சபையினால் செலுத்துவதற்கு உரிய சட்டரீதியான தன்மை தொடர்பான விடயங்கள் ஆராயப்படாமல் மற்றும் உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டு புலமைப்பரிசில் விண்ணப்பம் சுகாதார அமைச்சினால் நிராகரிக்கப்பட்டிருக்கும் போது அந்த உத்தியோகத்தருக்கு புலமைப்பரிசில்களுக்காக வெளிநாடு செல்வதற்கு 02 வருடங்கள் வரை சம்பளத்துடன் விடுமுறை மற்றும் தனிப்பட்ட செலவின படியாக (Personal Maintanace Allowance) செலுத்துவதற்கு பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக பிரத்தியேக செலவின படிகளாக செலுத்தப்பட்ட ரூபா 5.80 மில்லியன் தொகையை சுகாதார அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்ய முடியாதிருந்ததுடன் அந்த பணம் மற்றும் சம்பளமாக செலுத்தப்பட்ட ரூபா 3.79 மில்லியன் தொகை வைத்தியசாலைக்கு செலவின பொறுப்பாக இருந்தது. | வைத்தியசாலையிலிருந்து சேவையிலிருந்து விலகிய போதிலும் இந்த புலமைப்பரிசிலுக்காக கையொப்பமிட்ட பிணை முறியை உயர் கல்வி அமைச்சிற்கு மாற்றி அனுப்பப்பட்டிருந்ததுடன் அதில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் தொடர்ந்தும் அமுலில் உள்ளது. | சம்பளத்துடன் விடுமுறை மற்றும் பிரத்தியேக செலவின படியாக செலுத்துவதற்கு தீர்மானித்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக முறையான பரிசோதனை மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் எதிர்பார்த்த வெளிநாட்டு நிதியை பெற்றுக் கொள்வதற்காக திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் ஆறு மாடி கட்டணம் செலுத்தும் வாட்டு கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் பூர்வாங்க திட்டமிடல் நடவடிக்கைகளுக்காக 2017 ஏப்ரல் 08 ஆந் திகதி அரச பொறியியல் | நிதி ஏற்பாட்டு நிலைமை திருப்திகரமாக இருக்குமிடத்து இந்த செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட மையால் உரிய அடிப்படை நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட்டுள்ள பணம் விளைவற்ற செலவினமாக இல்லை. | இது விளைவற்ற செலவினமாக ஏற்படுமாயின் செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் எதிர்பார்த்த வெளிநாட்டு நிதியத்தை பெற்றுக் கொள்வதற்காக திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்திற்கு பெறுமதிசேர் வரியுடன் ஆலோசனைச் சேவைக் கட்டணமாக ரூபா 5.76 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திலிருந்து இந்த செயற்திட்டத்தை நீக்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டம் எதிர்காலத்தில் அமுல்படுத்துதல் நிச்சயமற்றதாக இருந்தமையால் செலவிடப்பட்ட ரூபா 5.76 மில்லியன் செலவினம் விளைவற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | ஆலோசனைச் சேவைக் கட்டணமாக ரூபா 5.76 மில்லியன் செலுத்தும் பொறுப்பில் ஈடுபட்ட உத்தியோகத்தர் களிடமிருருந்து அந்தப் பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | பொதுவைத்தியசாலை சபையின் சூரிய சக்தி முறைமை (Solar Energy Panels) செயற்திட்டத்திற்காக ஆலோசனைச் சேவைக் கட்டணமாக ரூபா 2.97 மில்லியன் 2018 ஆம் ஆண்டின் போது மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேலும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 372,803 ஆகும். எனினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திலிருந்து இந்த செயற்திட்டத்தை நீக்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் இந்த செயல்திட்டம் எதிர்காலத்தின் போது அமுல்படுத்துதல் நிச்சயமற்ற நிலையில் இருந்தமையால் செலவிடப்பட்ட ரூபா 2.97 மில்லியன் செலவினம் பயனற்ற செலவினமாக உட்படக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அரசாங்கத்தின் நிதி நிலைமையின் பிரகாரம் சூரிய வலு சக்தி செயற்திட்டம் தற்காலிகமாக கைவிடுவதற்கு வைத்தியசாலை பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தமையினால் அதன் பிரகாரம் 2020 மற்றும் 2021 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் நிதியேற்பாட்டு நிலைமை திருப்திகரமாக இருக்குமிடத்து இந்த செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மையால் உரிய செயற்பாடுகளுக்காக செலுத்தப்பட்ட அந்தப் பணம் பயனற்ற செலவினமாக இல்லை. | இந்த செலவினம் பயனற்ற செலவினமாக ஏற்படுமாயின் உரிய திட்டமிடலின்றி ஆலோசனைக் கட்டணமாக ரூபா 2.97 மில்லியன் செலுத்தும் பொறுப்பில் ஈடுபட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து அந்தப் பணம் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | பொதுவைத்தியசாலை | சரிசெய்ய வேண்டிய | அவதானிக்கப் |

சபையில் காணப்படுகின்ற இருப்புக்கள் தொடர்பாக கணனி முறைமையின் தகவல்கள் கணக்கீட்டு கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மீண்டும் கணக்கீட்டு முறைமையில் நாளதுவரையாக்கப்படாத சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக கணக்கீட்டு கணனி முறைமையில் காணப்படுகின்ற கொள்வனவு கிரயம், கடன்கொடுத்தோர், கடன்பட்டோர் மற்றும் வைத்தியசாலை கட்டண வருமானம் போன்ற விடயங்களின் உள்ளபடியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டதா என்பது தொடர்பாக ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. வைத்தியசாலையில் காணப்படுகின்ற கணனி முறைமையை நாளதுவரையாக்காமை, கணனி முறைமைக்கிடையே அந்நியோன்ய தொடர்பு (System Link) ஏற்படுத்தப்படாமை மற்றும் கணனி முறைமையில் தரவுகளை உள்ளடக்குதல், பரீட்சித்தல் மற்றும் அங்கீகரிப்பதற்குரிய செயல் நடைமுறைகள் உரிய அதிகார தரப்பின் கீழ் அமுல்படுத்தப்படாமை அதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக தேவையான தரவுகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் முறைமையில் உள்ளடக்கிய அறிக்கையை மாற்றுவதற்கு உள்ள வசததிகள் காணப்பட்ட போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

முறையை உள்ளடக்கிய கணனி செயற்பாடுகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக பணிப்பாளர் சபையினால் கணனி விசேட நிபுணத்து ஆலோசனையாளர் ஒருவரை நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை மற்றும் அவரின் அவதானிப்பு அறிக்கையின் பின்னர் மேற்கூறப்பட்ட முறைமை இரண்டிற்கும் இடையே உள்ள பிழைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பட்டுள்ள கணனி கணக்கீட்டு முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

## 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தரவு ஸ்கேன் செய்தல், சமூக மயப்படுத்தல் மற்றும் பதவியணியினர் படிகள் போன்றவைகளுக்காக இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ கணனி மென்பொருள் முறைமையொன்றை தாபிப்பதற்காக கணனி மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்வதற்குரியதாக 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது ரூபா 21.56 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்த கணனி முறைமை பயன்படுத்தப்படாதிருந்த மையால், இதற்காக செலவிடப்பட்ட கிரயம் விளைவற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் வைத்தியசாலை கணனி நிகழ்ச்சித் திட்டத்தை நாளதுவரையாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மற்றும் ஸ்கேன் செய்யப்பட்ட நோயாளர்களின் கட்டில் தொடர்பான தகவல்களும் அதற்காக பயன்படுத்தக் கூடிய முறையில் காணப்படுகின்றமையால் அவர்களின் விபரங்களை ஸ்கேன் செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 21.56 மில்லியன் தொகை பயனற்ற செலவினமாக இல்லை. | இந்த கணனி முறைமை தாபிக்கப்பட்ட நோக்கத்திற்காக ஈடுபடுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் மீண்டும் விலை அதிகரிப்பதற்காக அங்கீகாரம் வழங்க முடியாதிருந்த போதிலும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் SUCOD 160 Disposable Examination Gloves (Small) Lalan 570,000 அலகுகள் மற்றும் SUCOD 159 Disposable Examination Gloves (Medium) Lalan 730,000 அலகுகள் என்பன அலகொன்று ரூபா 6 அதிகரித்து அதாவது ரூபா 11 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 3.78 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கேள்வி நிபந்தனைகளில் விலை அதிகரிப்பு அனுமதிக்கப் படாதிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் COVID -19 தொற்றுநோயின் காரணமாக Disposable Examination Gloves இற்காக தேவை பலமடங்கால் உயர்வடைந்து சென்றமையால் நோயாளர்களின் சேவையை பேணிச் செல்வதற்காக இலங்கையில் உள்ள ஒரேயொரு வழங்குனரிடம் கோரிக்கையினை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டமை மற்றும் இந்த விலை அதிகரிப்பு பெறுகைக் | கேள்வி நிபந்தனைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர் களிடமிருந்து மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் அறவிடப்படல் வேண்டும். |

குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை விஞ்சி 03 பதவிகளுக்காக 251 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அவ்வாறே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத 05 பதவிகளுக்காக 10 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தமை மற்றும் எதிர்காலத்தில் உத்தேசிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் போது இந்த சகல பதவி பெயர்களும் வெளிப்படுத்தப்படும். | இந்த ஆட்சேர்ப்புக்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |